20.06.2025 OS.No. 155/2018

சாட்சி : PW 3 பூசைத்துரை

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**:

(6, 7 பிரதிவாதிகள் 4, 5 பிரதிவாதிகள் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டுள்ளனர்)

**9 முதல் 12, 17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**:

1. நான் உயிலில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் போட்டுள்ளேன். இந்த வா.சா.ஆ 3 உயில் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் தேதி மற்றும் மாதம் தெரியாது, 1985 ம் வருடம் எழுதப்பட்டது. மூக்கையா தேவர் எழுதிய உயில் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்களின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. மூக்கையா தேவர் குடும்பத்தில் பாகப்பிரிவினை நடந்தது தெரியுமா என்றால் தெரியும். அந்த பாகப்பிரிவினையில் கட்டுப்பட்ட சொத்துக்கள் குறித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் வீட்டு மனை, விவசாயம் நிலம் பிரித்தார்கள், ஆனால் சர்வே எண் தெரியாது.

2. தாவா சொத்து அந்த பாகப்பிரிவினையில் உள்ளதா என்றால் இல்லை. இந்த சொத்து மூக்கையா சேர்வை எப்படி பாத்தியம் என்றால் அவர் சொந்த உழைப்பில் வாங்கியது ஆகும். தாவா சொத்துக்கு சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. மூக்கையா சேர்வை பாத்தியப்பட்ட சுய சம்பாத்தியம் சொத்து குறித்த விவரம் தெரியுமா என்றால் அது ஊத்தாங்கரை சொத்து ஆகும். அதன் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது.

3. அவருடைய பூர்வீக சொத்துக்களுக்கு ஏதேனும் பேர் உள்ளதா என்றால் தெரியாது. மூக்கையா சேர்வை தாவா சொத்துக்கள் தவிர வேறு எதுவும் சுய சம்பாத்திய சொத்து உள்ளதா என்றால் தெரியாது. மூக்கையா சேர்வை 2 வது மகன் அழகுத் சேர்வை

என்னுடன் வேலைப்பார்த்தற்கு மற்றும் நடிகை சுந்தரம்பாள் வீட்டில் வேலை பார்த்தற்கு ஏதேனும் ஆவணம் மற்றும் ஆதாரம் உண்டா என்றால் இல்லை. அவர் குடிபழக்கத்திற்கு ஆளானதற்கு ஆதாரம் உண்டா என்றால் இல்லை, நான் பார்த்தன் அடிப்படையில் சொல்கிறேன். நான்கு மகன்களில் ஒரு மகன் குடிப்பழக்கத்திற்கு அடிமையானதால் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 2ம் மகன் அழகு சேர்வைக்கு எழுதிக்கொடுத்தார் என்று நான் சொல்வது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றும், நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. தாவா வழக்கு வாதிகளால் எதற்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சொத்தில் உரிமை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதன் அடிப்படையில் உரிமைக் கோருகிறார்கள் என்றால் உயிலின் அடிப்படையில் உரிமை கோருகிறார்கள். நான் உயிலை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் யார் யார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த உயில் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் காரைக்குடியில் வைத்து எழுதப்பட்டது. நான் சொல்வது போல உயில் குறித்து எனக்கு தெரியாது எனவும், வாதிகள் கேட்டுக்கொண்டதற்க்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**14, 16 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. நான் தாக்கல் செய்துள்ள நிருபணவாக்குமூலத்திற்கு நான் தான் விவரம் கூறினேன் என்றால் சரிதான். நான் அந்தமானில் தொழில் செய்தேனா என்றால் செய்தேன், எத்தனை வருடம் இருந்தேன் என்றால் 3 வருடம் இருந்தேன். அப்பொழுது தான் அழகு என்னுடன் சேர்ந்து வேலைப்பார்த்தார் என்றால் சரிதான். அப்போது அழகுக்கு வயது என்ன இருக்கும் என்றால் 20 வயதிற்கும். மூக்கையா சேர்வை குடும்பத்தை தெரிந்ததால் அழகு எந்த வருடம் பிறந்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. மூக்கையா சேர்வை எழுதி வைத்த உயில் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும்.

2. அந்த உயில் எங்கு வைத்து தயார் செய்தார்கள் என்றால் காரைக்குடி பதிவாளர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டது. காரைக்குடியில் எந்த இடத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் பழைய செஞ்சையில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் தயார் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அந்த உயில் பேனாவினால் எழுதப்பட்டு இருந்தது அதில் தான் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். மற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் முன்னிலையில் தான் உயிலில் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். அப்போது மூக்கையா சேர்வை நன்றாக நிதானமாகத் தான் இருந்தாரா என்றால் நிதானமாகத்தான் இருந்தார். என்னை சாட்சி கையெழுத்து செய்ய அழைத்துச் சென்றது மூக்கையா சேர்வை என்றால் சரிதான். மேற்படி உயிலில் மூக்கையா சேர்வை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் முன்னிலையில் தான் கையெழுத்து செய்தார் என்றால் சரிதான்.

3. நான் அந்த உயிலை அன்று பார்த்த பின்பு வேறு எந்த தேதியிலும் பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ 3 உயில் தான் அந்த உயிலா என்றால் ஆமாம். அந்த உயில் பேனாவால் எழுதப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு இருந்தது என்றால் சரிதான். பேனாவினால் எழுதி தட்டச்சு செய்யப்பட்ட உயிலில் நான் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். மூக்கையா எனக்கு உறவினரா என்றால் பெரியப்பா முறை ஆவார். நான் எந்த உயிலிலும் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றும் மூக்கையா சேர்வை எந்த உயிலும் தயாரிக்கவில்லை என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)– திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.